RUTNAM EVELYN JAFFNA
உ/1
2194

உ

# சுப்பிரமணியப் பிரபாவம்



பாரத்துவாசி

## ஆ. சண்முகரத்தினையர்

★

சுன்னுகம்

பொன்னம்பலம் சரவணமுத்து அவர்கள்

ஞாபகார்த்த வெளியீடு

27-1-72

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

உ

# சுப்பிரமணியப் பிரபாவம்



பாரத்துவாசி

ஆ. சண்முகரத்தினையர்

★


சுன்னுகம்

பொன்னம்பலம் சரவணமுத்து அவர்கள்

ஞாபகார்த்த வெளியீடு

27-1-72

திருமகள் அழுத்தகம், சுன்னுகம் - எ 354-1/72



திரு. போ. சரவணமுத்து அவர்கள்

தோற்றம் : 25–6–1908 மறைவு : 28–12–1971

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

உ

# திரு. பொன்னம்பலம் சரவணமுத்து

அவர்களின்

# வாழ்க்கைக் குறிப்புக்கள்

திரு. சரவணமுத்து அவர்கள் தெல்லிப் பழை சின்னப்பா பொன்னம்பலத்துக்கும் மல்லாகம் சதாசிவம் சின்னுச்சிப் பிள்ளைக்கும் மூன்றுவது பிள்ளையாக 25-6-1908 இல் தோன்றினார். இவருடன் ஒரு சகோதரியும், இரு சகோதரர்களும் தோன்றினர். சகோதரி பொன்னுப் பிள்ளை தெல்லிப்பழை திரு. அருளம்பலம் முத்துக்குமாரசுவாமி அவர்களை விவாகஞ் செய்து, சில காலத்துக்குள் இறைவனடி யெய்திவிட்டார். தமையன் திரு. சின்னையா அவர்கள் நீர்கொழும்பில் நெடுங்காலம் ஒவசியராகவிருந்து இளைப் பாறியுள்ளார். தம்பியார் திரு. கந்தையா அவர்கள் கொழும்பில் வழக்கறிஞராக

இருப்பதோடு ஸ்ரீமுருகன் வியாபாரத் தலத்துக்கு உரிமையாளராகவும் இருக்கிருர். இவ்விரு சகோதரர்களும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றனர்.

திரு. சரவணமுத்து அவர்கள் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிற் கல்விபயின்று 1928ஆம் ஆண்டில் தபால் தந்திப் பகுதியில் சேர்ந்தார். சுன்ஞகம் திரு. சின்னத்துரை அவர்களினதும் தில்லைமுத்துப்பிள்ளையினதும் ஏகபுத்திரி தங்கரத்தினத்தை 1931இல் விவாகஞ் செய்தார். இவ்விவாகத்தின் பயஞக இரு புத்திரரும் ஒரு புத்திரியும் தோன்றினர்.

மூத்தமகன் திரு. பொன்னம்பலம் அவர்கள் இலங்கைச் சர்வகலாசாலையில் B. Sc. பட்டம்பெற்று, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி வருகிருர். இவர் தெல்லிப்பழை திரு. சி. குலசிங்கம் அவர்களின் மகள் டாக்டர் குணபூபதியை விவாகஞ் செய்துள்ளார்.

இரண்டாவது மகன் திரு. சர்வேந்திரன் அவர்கள் இலங்கைச் சர்வகலாசாலையில் B. Sc. பட்டம்பெற்றதோடு, கணக்காளர் பரீட்சையில் சித்தியெய்திச் 'சச்சிதானந்த ஷொக்மன் விஜேரத்ன அன் கோ.' கம்பனியில்பங்காளராகவிருக்கிறார். இவர் மல்லாகம், திரு. ச. அம்பிகைபாகன் அவர்களின் மகள் பூங்கோதை B. A. அவர்களை விவாகம் செய்துள்ளார்.

மகள் சரோஜாதேவி, கொழும்பு பிறவுன்ஸ் கம்பனியில் நிர்வாகத் துறையில் கடமையாற்றும் மல்லாகம், திரு. அம்பிகைபாகன் ஆனந்தக்குமாரசுவாமி அவர்களை விவாகஞ் செய்துள்ளார்.

திரு. சரவணமுத்து அவர்கள் 1963 ஆம் ஆண்டில் தபாற்கந்தோர் தலைவர் பதவியிலிருந்து ஓய்வெடுத்தார். 1971ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆந் திகதி வைகுண்ட ஏகாதசியிலன்று சடுதியாக இறைவனடி சேர்ந்தார்.

உ

# இரண்டாம் பதிப்பு முன்னுரை

சில வாரங்களுக்குமுன் சுப்பிரமணியப் பிரபாவம் என்னும் நூல் பொன்னாவெளி இளைப்பாறிய உடையார் திரு. கு. அருளம்பலம் அவர்கள் மூலம் எனக்குக் கிடைத்தது. இந்நூல் அவர்களின் பாட்டனாரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் மாணாக்கருள் ஒருவருமான திரு. வீ. சின்னத்தம்பி அவர்களால் சேகரித்து வைக்கப்பட்ட நூல்களிலொன்றாகும்.

இந்நூல் அறுபதாண்டுகளுக்கு முன் பிரசுரிக்கப்பட்டது. இதன் ஆசிரியர் பாரத்துவாசி ஆ. சண்முகரத்தினையர் அவர்களைப்பற்றி முதற்பதிப்பில் சில கூறப்பட்டுள்ளன. இப்பொழுது அவர்களைப் பற்றி ஆராய்ந்தபொழுது பல புது விஷயங்கள் கிடைத்துள்ளன. அவர்கள் டச்சுக்காரர் காலத்தில் தேசாதிபதியாயிருந்த

ஒருவருக்குப் பிரதம மந்திரியாக விருந்த கொச்சிக் கணேசையர் வழித்தோன்ற லென்பர். அவர்கள் ஒரு அச்சுயந்திரசாலையைத் தாபித்து "ஞானசேகரம்" என்னும் சஞ்சிகையையும் திரிகோணசலபுராணம் முதலிய நூல்களையும் வெளியிட்டாரென அறியக் கிடக்கிறது. இவ் விஷயங்களை மேலும் ஆராயவேண்டும்.

இந்நூலில் சுப்பிரமணியக் கடவுளின் அவதார நோக்கமும், அப்பெருமானெடுத்த திருவுருவத்தின் விளக்கமும், கந்தபுராணத்துக்குப் பொருள் சொல்வோர் அவதானிக்க வேண்டியனவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளன.

இந்நூலைப் படித்தவுடன் இதை மறுபடியும் வெளியிட்டுப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பினேன். அவ் விருப்பத்தை நிறைவேற்ற ஒரு சந்தர்ப்ப

மும் கிடைத்தது. சமீபத்தில் இறைவனடி சேர்ந்த சுன்னுகம், இளைப்பாறிய தபாற் கந்தோர்த் தலைவர் திரு. சரவணமுத்து அவர்களின் பிள்ளைகள் தமது தகப்பனுர் ஞாபகார்த்தமாக ஒரு சிறு பிரசுரம் வெளியிட வேண்டுமென விரும்பினர். அவர்களுக்கு **சுப்பிரமணியப் பிரபாவம்** என்னும் நூலை வெளியிடலாமெனக் கூறினேன். அவர்களும் அக்கருத்தை உவந்தேற்றுக் கொண்டதின் பேரில், இப்பொழுது இப்பதிப்பு வெள்ளிவருகிறது.

சைவமக்கள் இதனைப் படித்துப் பயனடைவார்களாக.

மறைந்தவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**ச. அம்பிகைபாகன்**

'மணி மனை',
மல்லாகம், 27-1-72.

உ

# முகவுரை

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

— திருக்குறள்

உலகிலுள்ள பாக்களெல்லாம் நஞ் சமயகுரவர் நால்வருமருளிய திருஅருட்பா வாகமாட்டா. அதுபோல நூல்களெல்லாம் இம்மை மறுமைப் பயன்றருதற் குரியவாகா. கல்வியோ கரையில. கற்கப் புகு நம் வாணுளோ மிகச் சிலவினுஞ் சில. ஆராயின் இதற்குள் நமக்கு வந்தெய்த நிற்கும் பிணிகளோ மிகப் பல. ஆதலால் நாம் கற்றற்குரிய நூல்களைத் தெரிந்து கொண்டு அதன் பின்பே கற்கவேண்டும்.

இவ்வாராய்வுகளொன்றுமின்றி, நம் மவருட் சிலர், கல்லுழி மன்னன்பாட்டு,

சாவற்பாட்டு, புரூப்பாட்டு முதலிய பய னற்ற நூல்களை விலைகொடுத்து வாங்கி, தந்தியானப் பொருளாய் நிலைபெற் றிருந்த பத்தியினையுந் தம்பொருளையு மிழந்துவிடுதலைக் காண்கின்றோம்.

அங்ஙனமாகாது அவர் கொடுத்து வாங்கும் அச் சிறுவிலை உள்ளதாகவும், விரதமுமனுட்டித்து வளர்த்து வருந் தெய்வ பத்தி இவ்வழியாற் புலன் வேறு பட்டு இடையிலே கெடுதலின்றி மேன் மேலும் வளர்ந்து வருதற்கு ஏதுவாகவுஞ் சுப்பிரமணியக் கடவுளின் இலக்கணங் களுட் சிலவற்றை மிகச் சுருக்கிச் செந் தமிழ் நடையிலே வசன ரூபமாக எழுதப் பட்டதாகும் இச் சிறுநூல்.

இங்கே கூறப்படும் பதியிலக்கணங்கள் கந்தபுராணமாகிய பெருங் கடலினின்றும் ஒரு சிறிது முகந்து யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்

மருகரும், மாணுக்கரும், வித்துவசிரோமணியுமாகிய ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள், யாழ்ப்பாணம் வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையுபாத்தியாயரும், மதுரை, யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப்புலவரும், அநேக நூல் உரை ஆசிரியருமாகிய சுன்னுகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் மாணுக்கருந் திரிகோணுசலபுராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்தியவருமாகிய பாரத்துவாசி ஆ. சண்முகரத்தினையரவர்களால் இயற்றப்பட்டுள்ளது.

ஆதலால் இந் நூல் எவர்க்கும் பெரும் பயன்படும் என்று சொல்ல ஒருவரும் பின்னில்லார்கள் என்று எண்ணுகின்றேன்.

இங்ஙனம்
**பொ. மாணிக்கம்பிள்ளை**

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
17-8-10

உ

கணபதி துணை

# சுப்பிரமணியப் பிரபாவம்

## விநாயகர்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

## சுப்பிரமணியர்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
யேவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி யன்னன்
சேவலும்மயிலும்போற்றி திருக்கைவேல்போற்றிபோற்றி.

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாயும் வேதங்களுக்கும் ஏழுகோடி மந்திரங்களுக்கும் மூலமாயுங் காசியிலே இறப்பவருக்குச் சிவபெருமான் உபதேசித் தருளுந் தாரகப்பிரமமாயுமுள்ளது ஓங்

காரம் என்றும் குடிலை என்றுந் தனிமொழி என்றும் மூலமொழி என்றும் பெயர் பெறும் பிரணவமாகும்.

அப் பிரணவத்தைத் தமது திருமுகங் களுள் ஒன்ருக உடையவரும் இக் கலி யுகத்திலே கண்கண்ட பரமதெய்வ மென்று நூல்களால் விதந்து கூறப்படு பவரும் அடியார்க்கெளியருமாகிய சுப்பிர மணியக்கடவுளின் பிரபாவமானது மிகச் சுருக்கிச் சொல்லப்படுகின்றது.

விநாயக வைரவ வீரபத்திர சுப்பிர மணிய மூர்த்தங்கள் ஒவ்வோர் காலத் திலே துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனத் தின் பொருட்டு எப்பொருட்கு முழு முதல்வராகிய சிவபெருமான் கொண்டரு ளிய மூர்த்தங்களாம். அவர் ஆன்மாக்க ளுடைய வினைகளைக் கெடுத்தற்கும் போகத்தை ஊட்டுதற்குங் கோர மூர்த்த முஞ் சிவ மூர்த்தமுங் கொண்டருளுவர்.

வைரவ வீரபத்திர மூர்த்தங்கள் பிரமன் தக்கன் முதலாயிஞேரது சிவ தூஷண சிவத்துரோகங்களாலாகிய வினே களைக் கெடுத்தற்கும் விநாயக சுப்பிர மணிய மூர்த்தங்கள் கயமுகன் சூரபன்மன் முதலாயிஞேர் செய்துவந்த துன்பங்களி னின்றும் நீக்கித் தேவர்களுக்குப் போக மூட்டுதற்குங் கொண்ட மூர்த்தங்களாம்.

ஆதலாற் சுப்பிரமணியக் கடவுள் மணியும் ஒளியும் போலச் சிவபெருமானி னின்றும் வேருகாதவர். அக்கினியின் சுடுதல் அடுதல் விளக்குதற் சத்திகள் போலச் சிவபெருமானின் சத்தியாயுள் ளவர்.

சுப்பிரமணியக்கடவுள் ஆன்மாக்களைப் போல யோனிவாய்ப்பட்டுத் தோன்றும் இயல்புடையவரல்லர். அவர் திருமேனி தோல், இரத்தம் முதலிய தாதுக்களா லாகிய நமது சரீரம் போன்றதன்று.

அருவமாய் உருவமாய் அநாதியாய் ஒன்ருய்ப் பலவாய்ப் பரப்பிரமமாய், கோலம் காலம் குணம் உலகம் முதலிய கருமங்கள் கடந்துநின்ற பரஞ்சோதிப் பிழம்பாயுள்ளவர். சிவபெருமான் சூர பன்மனுதியருக்குத் தாங் கொடுத்தருளிய வரங்களைத் தாமேயழித்தல் முறைமை யல்ல என்றும் விட்டுணு முதலிய மற்றை யோரால் அச்செயல் முடியாமையையுந் திருவுளங்கொண்டு ஆறு திருமுகங்களும் அபயகரங் கொடி குலிசந் தோட்டி அஸ்திரம் வேல் என்னும் ஐந்து முறையே அமைந்த கரங்கள் என்னும் வலத் திருக் கரமாறும் வரதகரந் தாமரை மணி மழு தண்டு வில் என்னும் ஐந்து முறையே அமைந்த கரங்கள் என்னும் இடத் திருக் கரமாறும் பொருந்திய அருள்மயமாகிய திருவடிவங் கொண்டருளினர்.

ஆதலாற் சுப்பிரமணியக் கடவுளுக்குச் சரீரமெனப்படுவது முற்றறிவு, வரம்பிலின்பமுடைமை, இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, தம்வயமுடைமை என்று சொல்லப்படுஞ் சுத்தமாகிய ஆறு குணங்களும் ஆறு திருமுகங்களாகவும் ஒழிந்த திருவருட் குணங்கள் மற்றை அவயவங்களாகவும் அமையப்பெற்றுள்ள அருட்டிருமேனியேயாம்.

அவர் சருவவியாபகர். மும்மூர்த்திகளாய் நிற்பவர். ஓங்கார முகத்தினராயுள்ளவர். ஓங்கார மூலப்பொருளாயுள்ளவர். உலக வடிவாயுள்ளவர். உலக காரணமாயுள்ளவர். உலகத்தைக் கடந்து நிற்பவர். உலகம் வழிபட நிற்பவர். உலகிற்கு உயிராய் நிற்பவர். உருவங்கட்கெல்லாம் உறைவிடமாய் உள்ளவர். ஞானமயமாயும் உணர்ந்தார்க்கு உணர்

வரியராயுந் தியானப்பொருளாயும் அறிவுக்கறிவாயும் நிற்பவர்.

ஆன்மாக்களுக்கு இருவினைப் பயனைக் கூட்டுபவர். அவ்விருவினையுஞ் சமப்படின் மேனிலையாகிய பரகதியைத் தருபவர். காண்பவன் காட்சி காட்சிப்பொருள் என்னும் மூன்றுமாய் நிற்பவர். செய்பவருஞ் செய்வித்து நிற்பவரும் அடைதற்கரிய பொருளுமாய் நிற்பவர்.

அவர் சிறுவனுமாவர். குரவருமாவர். தினையினுஞ் சிறியராவர். நெடியருமாவர். வேண்டிய வேண்டிய வடிவங் கொள்பவருமாவர். அவராணையின்றி ஓரணுவும் அசையாது. பிரணவமாயும் பிரணவ பேதங்களாயும் வேதங்களாயும் ஆகமங்களாயும் பஞ்சாக்ஷரமாயும் கலைகளாயும் அவைகள் அளந்து காண்டற்கு எட்டாதவராகியும் முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளாகியும் ஈசபதப்

பிரயோகத்திற்கு உரியவராகியும் அந்தரி யாமியாகியும் எவர்க்குந் தாய் தந்தைய ராகியும் நிலைபெற்றருளுவர்.

உட்டிருவடியிலே பருவதசமூகமும்; புறவடியிலே சலசமூகமும்; கால் விரல் களிலே இடியேறும், நட்சத்திரங்களும், கிரகங்களும்; பரட்டிலே வருணனும், சோமனும், நிருதியும், அரக்கரும்; கணைக் காலிலே இருஷிகளும், சிந்தாமணியும்; முழங்காலிலே விஞ்ஞையர் முதலாயி னோரும்; தொடையிலே இந்திரனும், சயந் தனும்; தொடை மூலத்திலே இயமனும், காலனும்; கடிதடத்திலே அசுரரும்; கடிதடத்தின் பக்கத்திலே தேவர்களும்; குகியத்திலே நாகரும்; சேபத்திலே அமிர் தமும்; நாபியிலே சீவராசியும்; மார்பிலே கலைஞானமும்; பூணூலிலே சிவஞானமும்; உரோமத்திலே அண்டமும்; அகங்கை யிலே அகில போகமும்; தோளிலே பிரமா

வும், விஷ்ணுவும்; கைவிரலிலே தேவ ரம்பையரும்; கண்டத்திலே அக்கினியும், சப்தசாலமும்; வாயிலே வேதமும்; தந்த வரிசையிலே எழுத்துக்களின் கூட்டமும்; நாவிலே சிவாகமங்களும்; உதட்டிலே ஏழுகோடி மந்திரங்களும்; நாசியிலே வாயுவும்; கண்களிலே சந்திர சூரியரும்; காதிலே திசையும்; நெற்றியிலே பிரணவமும்; சிரசிலே பரமான்மாவும் விளங்க இங்ஙனம், கடல், உலகம், திக்கு, புவனம், அண்டம், தேவர் முதலிய எல்லாம் முறைப்படி தமது விசுவரூபத்திலே அமையும்படி ஒருருக்கொண்டு சூரபன்மனைத் தரிசிப்பித்தருளிய திருவருளினலே மேற் சொல்லிய இலக்கணங்கள் யாவும் நன்ருக விளங்கும்.

சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் மத்தியிலே சுப்பிரமணியக்கடவுள் எழுந்தருளியிருக்கும் மூர்த்தஞ் சோமாஸ்கந்தமூர்த்த மென்று சொல்லப்படும்.

உமாதேவியாரால் ஆறு திருவுருவும் ஒன்ருகிக் கந்தன் என்னுந் திருநாமம் பூண்ட அவரைக் காங்கேயன் என்றுங் கார்த்திகேயன் என்றுந் திருமால்மருகன் என்றுந் தேவ சேனுதிபதி என்றும் உரைப்பதெல்லாம் உண்மையன்று. அவருக்கு அந்நாமங்கள் அவரது அருட்டொழில்களால் எய்தப் பெற்றனவன்றி உண்மையாம் என்று எண்ணுவது ஏழைமையே. அவரோ பிரமவிட்டுணுக்களால் அறியப்படாத மேலாகிய ஒளிப்பிழம்பாயுள்ளவர்.

அவர் திருக்கரங்களில் அமைந்துள்ளதோ மரங் கொடி வாள் குலிசம் அம்பு அங்குசம் மணி தாமரை தண்டம் வில் மழு என்னும் பதினெரு ஆயுதங்களும் பதினேருருத்திரர்களாவார்.

வேலாயுதமோ சத்திருபமாயும் அளத்தற்கரிய ஒளிமயமாயும் ஆறு தலைகளை

உடையதாயுமுள்ளது. அவரது மூன்று பத்திரங்களை உடைய வேற்படையானது இச்சாசத்தியுஞ் ஞானசத்தியுங் கிரியா சத்தியும் ஆகிய மூன்று சத்திகளின் அடுக்காம்.

ஆன்மாக்களுக்கு வீட்டின்பத்தைக் கொடுக்க எழும் விருப்பம் இச்சாசத்தி எனப்படும். அதற்கு வேண்டுவனவற்றை அறிதற்குரிய அறிவு ஞானசத்தி எனப் படும். அறிந்தவைகளைச் செய்யுஞ் செயல் கள் கிரியாசத்தி எனப்படும்.

அவர் திருக்கரத்திலுள்ள ஆயுதங்கள் கொல்லனுலையிற் செய்யப்பட்டு உயிரெறி கருவியாகி இரத்தந் தோய்ந்து முடை நாற்றம் வீசும் நமது கை ஆயுதங்கள் போன்றனவல்ல.

தெய்வயானை யம்மையாரும் வள்ளி யம்மையாரும் முறையே அவருக்கு ஞான சத்தியுங் கிரியாசத்தியுமாவர்.

இத் தேவிமார் நமக்குச் சிற்றின் பாநுபவத்தைத் தந்து மயக்கி அலைக்கு நமது மனைவியர் போன்றவரல்லர்.

சுப்பிரமணியக்கடவுளுஞ் சத்திமாரும் எம்மை யீன்றருளிய தாய் தந்தைய ராகும்.

இவர்கள் தம்முட் சேர்ந்திருப்பது நாமெல்லாம் போக மோக்ஷங்களை அடைந்துய்தற் பொருட்டேயாம். இத னுண்மை யறியாதவர்கள் நம்மைப் போலக் காமமேலீட்டினல் வருத்தமுற் றுப் புணர்ச்சி விருப்பத்தினல் ஏங்கி வள்ளி நாயகியாரைத் தேடி அலைந்து திரிந்தார் நங் கடவுளும் என்று சொல்லி எரிவாய் நரகத்திற்கு ஆளாகின்றார்கள்.

தேவாலயங்களிலே வருஷந்தோறுங் கந்தபுராணம் படித்துப் பொருள் சொல் பவர்கள் இதனைச் சிந்தித்தல் வேண்டும். சிவபுராணங்கள் சிற்சில இடங்களிலே

குறிப்பாகவும் பொருள்கொள்ளக் கிடக்கும். திருவாதவூரடிகள் முதலிய சிவாநுபூதிச் செல்வர்கள் அருளிய சாத்திரங்களாலது துணியப்படும்.

கந்தபுராணத்திற்குப் பொருள் சொல்வோராற் பெரும்பாலுஞ் செம்பொருளாகிய சிற்றின்பப் பொருளே போதிக்கப்படுகின்றமையினுல் அதனைக் கேட்குஞ் சைவசமயிகள் அதனையே மெய்ப்பொருள் எனக்கொண்டு நிச்சயித்துவிடுகின்றுர்கள். ஆதலினுற் பெருங்கேடு விளைகின்றது. இவைகளையறியும் புறச்சமயிகள் நம்மையுஞ் சமயத்தையுங் கடவுளையுந் தூஷிக்கின்றுர்கள்.

வேறுசிலர் காமாதி பெருங் குற்றமுடையார் கடவுளாவது எப்படி என்று வெறுத்துப் பரசமயப் பிரவேசஞ் செய்கின்றுருமாகின்றுர்கள்.

பத்திச்சுவை கனிந்தொழுகக் கந்த புராணம் பாடியருளிய நிமலஞானவாரிதி யாகிய ஸ்ரீ கச்சியப்பசிவாசாரிய சுவாமி கள் இங்ஙனம் நாமெல்லாம் விபரீத உணர்வு கொண்டு மயங்குறு வண்ணம் ''உலைப்படு மெழுக தென்ன வுருகியே யொருத்தி காதல், வலைப்படு கின்றான் போல'' என்றும், ''கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலிற் றோன்றி, யலைப்படு தன்மைத் தன்றோ வறுமுக னுடலெல்லாம்'' என்றும், ''எல்லையி னமைய லுற்றிரங்கு வானென்'' என்றும், ''குமரற் கீது திருவிளையாடல் போலாம்'' என்றும், ''மாயைகள் செய்தும்'' என்றும் அவ்வவ் விடங்களிலே குறிப்பித்தருளினமை உய்த் துணரற்பாலது.

ஆதலால் ஆலயமெங்குஞ் சைவாகமங் களை ஓதி உணர்ந்தவர்களும் நல்லொழுக்க முள்ளவர்களும் ஆகிய மேன்மக்களைக்

கொண்டு கந்தபுராணத்தின் உண்மைப் பொருள்கள் நன்று வெளிப்பட போதிப்பித்தால் இவ்வாறு விபரீதஞானம் உண்டாகாது சுப்பிரமணியபத்தி வளர்ந்து கொண்டு வரும்.

இன்னும் வேறுசிலர் சுப்பிரமணியக் கடவுளுந் தேவர் முதலாயினோரும் ஆகாயத்தினின்று யுத்தஞ் செய்தமை எவ்வாறு என்றும் இவைகள் வியாசமுனிவர் கட்டிவிட்ட கட்டுக்கதைகள் என்றும் புலம்பித் திரிகின்றார்கள்.

நம் முன்னோர்கள் ஆகாய வழியிற் சஞ்சரித்தார்கள் என்றும் அங்கே நின்று போர் புரிந்தார்கள் என்றும் அதனுல் அவர்கள் அதற்குரிய சாத்திரங்களையுங் காற்றடுக்குக்களின் நிலைகளையும் வாயு கதியின் பேதங்களையும் அங்கங்குள்ள குளிர் வெப்பங்களின் நிலைமைகளையும் நன்று உணர்ந்திருந்தார்கள் என்றும் விஷ

வாயுக்சுளினுலும் அச்சத்தை வருவிக்குஞ் சத்த பேதங்களினுலும் ஆகாயத்திலே மறைந்து நின்று பகைவர்களே அழிக்கும் இயல்புடையராய் இருந்தார்கள் என்றும் அறிவின் மேம்பட்ட அங்கிலேய பண்டிதர் கள் இப்பொழுது நமக்குப் போதிப்பதை நாமெல்லாருங் கேட்கின்றேம்.

ஆதலால் நூல்களினுண்மைப்பொருளே உணர்ந்து கொள்ளுதலே அறிவின் கூர் மைக்குப் பேரழகாகும்.

இனி, சுப்பிரமணியக் கடவுளேத் தியானிப்பது முற்பிறவிகடோறுஞ்செய்து வந்த தவத்தின் மிகுதியினுற் கைகூடப் பெற்றுக் கண்களாலே தரிசிக்கவும் பெற் றேர் தீவினே நீங்கித் திருவருட்குரிய ராவார்.

கொலே முதலிய மாபாதகங்களேயே செய்து தேவரையுமேவல்கொண்டு வேத

வரம்பினையுமழித்த சூரபன்மனே அமைந்த சாட்சியாகும்.

அவர் திருவடிக்கண்ணே வைக்கப் படுந் தலையன்பே அவரது அகண்டாகார பரிபூரணத்திலே இரண்டறக் கலத்த லாகிய அத்துவித நிலையைக் கொடுக்கும்.

இங்ஙனந் தலையன்பு செய்து திருவடித் தியானத்தாற் றிருவருள் பெற்றோர் வீரவாகுதேவர் உக்கிரர் விசயர் இந்திரன் முதலாயுள்ளோர்.

திருமுருகாற்றுப்படையினுல் நக்கீர ரும் திருப்புகழினுல் அருணகிரிநாதருந் துதித்து அவ்வாறு திருவருள்பெற்றவர் களாம்.

ஆன்மநாயகராகிய சுப்பிரமணியக் கடவுளது திருநாமங்களைக் கேட்டவுடன் நம்வசமழிந்து அவரைத் தரிசித்தலுங் கைகூடியபொழுது நமக்கு அன்பின் பெருக்கம் முறுகி வளருதல்வேண்டும்.

இலக்கண இலக்கியங்களைக் கற்று அதனால் வேதாகமங்களைக் கற்றுணர்ந்து கொண்டோம் என்று அகங்காரங்கொள்ளின் அவர் அகப்படார். பின் பத்தியாகஞ் செய்து அவரை வசப்படுத்தல் வேண்டும். அவ்வலையிலே தடையின்றி அகப்பட்டு விடுவர்.

அளவிடற்கரிய பெருவிலையினையுடைய தொரு மாணிக்க ரத்தினம் வறியவனொருவனுக்குக் கிடைக்குமாயின் அவன் அதனை நிற்பினும் இருப்பினுங் கிடப்பினும் நடப்பினும் உண்ணினுந் துயிலினும் விழிப்பினும் இமைப்பினும் மறக்கவே மாட்டான்.

அதுபோல உலக விஷயங்களிலே முயலும் நாங்கள் அனைவரும் பெண்களிடத்தே வைத்திருக்கும் ஆசையின் நூறாயிரத்தில் ஒருபங்களவேனும் அம் மாணிக்கத்தினை ஒத்த சிவசுப்பிரமணியக்

கடவுளது ஞானநந்த வடிவமாயுள்ள திருவடிகளிலே அன்பு வைத்து நிற்பினும் இருப்பினுங் கிடப்பினும் நடப்பினும் உண்பினுந் துயிலினும் விழிப்பினும் இமைப்பினும் ஓர்போதும் மறவாதிருந்து மோக்ஷவின்பத்தை அடைதல் வேண்டும். இதுவே அரிய மாநுடப்பிறவியினுலாகிய பயனும்.

அன்பின் முதிர்ச்சியிலே ஆன்மநாயகர் விளங்குகின்ருர். அன்புஞ் சிவமும் இரண் டல்ல. முப்பத்தாறு தத்துவங்களின் மேற் பட்ட திருவடியைச் சேர்ந்து அதன் கீழிருத்தலே வீடுபேருகும்.

'' சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச் சென்றங்கு, இறுமாந் திருப்பன் கொலோ.'' என்பது தேவாரம்.

புன்னெறி யதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலா
நன்னெறி யொழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி
யென்னையு மடிய ணுக்கி
யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாதபங் கயங்கள் போற்றி.

துய்யதோர் மறைக ளாலுந்
துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க
சேவலு மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க வன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க
வாழ்கவிப் புவன மெல்லாம்.

பாராகி யேனைப் பொருளா
யுயிர்ப்பன்மை யாகிப்
பேரா வுயிர்கட் குயிராய்ப்
பிறவற்று மாகி

நேராகித் தோன்றி லிலதாகி
நின்ருன் கழற்கே
யாராத காதலொடு போற்றி
யடைது மன்றே.

திருச்சிற்றம்பலம்

வேலுமயிலுந் துணை

கச்சியப்பசிவாசாரியர் திருவடி வாழ்க

உ

# அறுமுகன் கொண்ட வியன்பெரு வடிவம்

வெம்புய லிடையிற் றேன்றி
  விளிந்திடு மின்னு வென்ன
விம்பரி லெமது முன்ன
  மெல்லையி லுருவங் கொண்டா
யம்பினி லவற்றை யெல்லா
  மட்டன மழிவி லாத
நம்பெரு வடிவங் கொள்வ
  நன்றுகண் டிடுதி யென்றான்.

கூறிமற் றினைய தன்மை
  குரைகட லுலகந் திக்கு
மாறிலாப் புவன மண்டம்
  வானவ ருயிர்கள் யாவு
மாறுமா முகத்து வள்ளன்
  மேனியி லமைந்த தன்றி
வேறிலை யென்ன வாங்கோர்
  வியன்பெரு வடிவங் கொண்டான்:

உள்ளடி வரைகள் யாவு
    மொண்புற வடியி னீத்தம்
வள்ளுகிர் விரல்கண் முற்றும்
    வானுரு மேறு நாள்கோ
ளெள்ளரும் பரடு தன்னி
    லிரும்புனற் கிறைவன் சோம
னள்ளிரு ளனைய மேனி
    நிருதியோ டரக்கர் நண்ண.

அடிதிரள் கணைக்கா றன்னி
    லாரிடர் மணிகள் சானு
வடிவமை முழந்தாள் விஞ்சை
    வானவ ராதி யானோர்
தொடைதனின் மகவான் மைந்தன்
    றொடைமுத னடுவன் காலன்
கடிதடத் தசுரர் பக்கங்
    கடவுளர் யாரு நிற்ப.

இருப்பினி னுகர் கோச
    வெல்லையின் மருந்தே யுந்திக்
கருப்படு முயிர்கண் மார்பிற்
    கலைகண்முந் நூலிற் போத

மருப்பயி லுரோமத் தண்ட
மங்கையி லகில போகந்
திருப்பெருந் தடந்தோள் வைப்பிற்
செங்கண்மால் விரிஞ்சன் மேவ.

மெல்லித ழனைய செங்கை
விரன்மிசை யணங்கி னல்லா
ரொல்லொலி யங்கி கண்ட
மொப்பிலா மணிவாய் வேதம்
பல்லிடை யெழுத்து நாவிற்
பரமவா கமத்தின் பேத
நல்லிதழ் மனுவின் விஞ்சை
நாசியிற் பவனன் மன்ன.

கருணைகொள் விழியிற் சோமன்
கதிரவன் செவியிற் றிக்குத்
திருநுதற் குடிலை வைப்புச்
சென்னியிற் பரம வான்மா
மரபினின் மேவித் தோன்ற
மாறிலா திருக்குந் தொல்லை
யொருதன துருவங் காட்டி
நிற்றலு மும்பர் கண்டார்.

— கந்தபுராணம்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்—எ354-1/72